## இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

### மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 08.06.2016

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்புமற்றும் அறிவுரைகள் (01.06.2016 முதல் 05.06.2016)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் 5 நாட்களுக்கு பரவலாக மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34° செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவமழை துவங்கவுள்ளது. எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி சிறுகுறு தானியங்களை மேற்கு மழைத்தொடர்ச்சி அடிவாரங்களில் விதைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி பொள்ளாச்சி பகுதிகளில் 40 நாட்களான கடலையில் ஜிப்சம் ஏக்கருக்கு 200 கிலோ இட்டு மண் அணைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடுவினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடுவீக்க நோய் வராமல் தவிற்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் அதிக காற்றிலிருந்து பாதுகாக்க 5 மாதங்களுக்கு மேலான வாழைக்கு முட்டுக் கொடுக்கவும், முன்பட்ட கரும்பிற்கு விட்டம் கட்டவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இறவை பயிர்களுக்கும் தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் தற்போது நடப்பட்ட மஞ்சள் கிழங்குகள் அழுகிவிடாமல் தவிர்க்க போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 33°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

காற்றின் ஈரப்பதம் 50 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 11 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ ஆடுதுறை 47 விதைகளை விதைப்பு செய்வதற்கு முன்பு விதைகளை கார்பென்டாசிம் (Carbendazim)மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் (Pseudomonas) பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும்.
- ✓ குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றாங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும்.
- ✓ எதிர்ப்பார்க்கப்படும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்ணிலுள்ள பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கலாம்.
- ✓ திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், இரண்டரை சென்ட் நிலத்தில் மேட்டு பாய் நாற்றங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையை சீராக தூவி நாற்று விடவும். முதல் ஐந்து நாள் வரை பூவாளி உதவியுடன் நாற்றங்கால் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்கவும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழைஎதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது.காலைநேரகாற்றின் ஈரப்பதம் 48 முதல் 95 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ மேுதல் 20 கி.மீவேகத்தில்வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் கொய்யாவில் பழஈயின் தாக்குதல் தென்படுவதால் இதனை கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 EC அல்லது மாலத்தியான் 50 EC @ 1 மி.லி./ லிட்டர் 15 நாட்களுக்கு 4 முறை வீதம் தெளித்து கட்டுப்படுத்தவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் மாமரத்தில் பழஈயின் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த மரங்களின் இடைப்பகுதியை நன்கு உழ வேண்டும். பின்பு 1% மீத்தைல் யூஜினால் மற்றும் மாலத்தியான் 2 மி.லி./ லிட்டர் இரண்டையும் கலந்து அதில் 10 மி.லி. ஒரு பொறியில் இட்டு ஒரு எக்டருக்கு 25 என்ற அளவில் காலை 6 மணியிலிருந்து 8 மணி வரை வைக்கவும். இப்பொறியினால் ஈக்கள் கவரப்படும் அதனை சேகரித்து அழிக்கவும். தாக்குதல் பொருளாதார சேதநிலையை விட அதிகமாக இருந்தால் 3% வேப்பஎண்ணெய் தெளித்து கட்டுப்படுத்தவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக காற்றின் வேகத்தை ஒட்டி பயிர் சாயாமல் தடுப்பதற்காக கரும்பில் அடுத்தடுத்த வரிசைகளில் உள்ள பயிர்களின் தோகையை ஒன்றோடொன்று கட்டவும். வாழைக்கு முட்டு அணைக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை தேனி,புதுக்கோட்டை, திண்டுக்கல்,இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் 33°செ, மற்ற மாவட்டங்களில் 37°செ முதல் 38°செ ஆகவும், பதிவாக வாய்ப்புள்ளது. இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் 27°செ, மற்ற மாவட்டங்களில் 22°செ முதல் 29°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேரகாற்றின் ஈரப்பதம் 52 முதல் 75 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 10 கி.மீ முதல் 20 கி.மீ வரையிலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை பெய்ய வாய்ப்பு இல்லாததால் மண் மற்றும் பயிரின் வளர்ச்சியினைப் பொறுத்து நீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- ✓ சொட்டுநீர் பாசனம் மேற்கோள்வதன் மூலம் நீர்த் தேவைகளைக் குறைக்கலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம்மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலோசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை16°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரக் காற்றின் ஈரப்பதம் 75 முதல் 82 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 2 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மரவகைப் பயிர்களை நடவு செய்ய இது உரிய தருணமாகும். நடவின் போது, கண்றுக்கு 50 கிராம் வேர் உட்பூசணம் இட்டு நடவு செய்யவும்.
- ✓ உருளை கிழங்கில் வெப்ப நிலை மாற்றம் காரணமாக, சாம்பல் நோயை கட்டுப்படுத்த சைமோமாக்சில் 8% ரூ மாங்கோசெப் 64 % சதவீத மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து தெளிக்கவும.
- ✓ அறுவடை நிலையில் உள்ள கேரட் பயிரில், தொடர் மழையின் காரணமாக அழுகல் நோய்பரவிவருகின்றது. கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குலோரைடு ஒரு கிராம் , ஒரு லிட்டர் தண்ணிருக்கு என்ற அளவில் கரைத்து பயிரைச்சுற்றி ஊற்றவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு 7கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ *அடுத்துவரும் மூன்று நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் பொதுவாகமேமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய வாய்ப்புள்ளது. பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் சற்றே அதிகரிக்கும் வாய்ப்பிருந்தாலும், காற்றின் வேகம் பிற்பகலுக்குமேல் கூடுதலாக் காணப்பட்டு, வெய்யிலின் தாக்கத்தை குறைக்கும், மேற்கிலிருந்து வீசிக்கொண்டிருக்கும் காற்றாலும். பருவமழை துவங்குவதற்கு சிலநாட்களுக்கு முன்னர் பெய்யும் கோடை மழையாலும், சற்றேறக்குறைய கோடைக்காலம் முடிவுக்கு வருவதைக் குறிக்கின்றன. யஎனவே பருவமழைக் காலத்தில் காற்றின் வேகத்தைதடுத்து, தீவன விரயத்தை குறைக்கும் முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டிய தருணம்.*
- ✓ *வைகாசிப் பட்டத்தில் நிலக்கடலைசாகுபடிசெய்யும் விவசாயிகள் விதைநேர்த்தி செய்துவிதைக்க வேண்டும். மேலும் விதை விதைப்பதற்கு முன் 4 கிலோ டிரைக்கோடேர்மாவிரிடி(Trichoderma viridi) மற்றும் 250 கிலோதொழுஉரத்துடன் கலந்துஒரு எக்டருக்கு இடவேண்டும். இதனால் மண்மூலமும் விதை மூலமும் பரவக்கூடிய நோய்களை எளிதாகக் கட்டுப்படுத்தலாம்.*

**6. வடகிழக்கு மண்டலம்**

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசானமேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செமுதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 74 மற்றும் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 16 கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ உழவர்கள் தற்போது உள்ள மண்ணின் ஈரத்தை பயன்படுத்தி கோடை உழவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் இதன் மூலம் மண் வளத்தை அதிகப்படுத்தலாம்.
- ✓ தோட்டப்பயிர்களின் வேர் பகுதியில் தேங்காய் நார் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கலாம்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும். மேலும் பால் கறந்த பின்பு துசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும்மேகமூட்டத்துடன் காணப்படும்.இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை**31**°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை **25**°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலைமற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் **86** மற்றும் **95** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு **10** கி.மீவேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழை : அறுவடைச் செய்யப்பட்ட வாழைத்தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும். இதனால் மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்.
- ✓ ரப்பர் : பாலித்தீன் ரைன் கார்ட்-ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களில் பால் வெட்டலாம்.
- ✓ அன்னாசி : மழை நீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ பலா : அறுவடைச்செய்யப்பட்ட பலா பழங்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.
- ✓ மிளகு : மழை இருக்கும் பட்சத்தில் வேர் விட்ட மிளகு குச்சிகளை நடவு செய்யலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.**